983 பிப்ரவரி 15]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த மீஸல்ஸ் வேக்ஸின் என்பதைப் பொறுத்த வரையில் 7 இலட்சத்து 60 ஆயிரம் டோஸஸ் இந்த ஆண்டு நாம் உபயோகப்படுத்தி இருக்கிறோம். இதற்குத் தேவை எவ்வளவோ அந்த அளவுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றது.

தமிழ் நாட்டில் ஆரம்ப சுகாதார மையம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண். 295—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார மையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் நடப்பாண்டில் எத்தனை கட்டப்படுகின்றது? இதற்கு அரசு எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்து இருக்கின்றன. இப்போது 1981-82-ல் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக ஏற்படுத்துவதற்கு 11.5 இலட்சம் ரூபாய் செலவாகின்றது என்பதைத் தெரித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்தான் இருக்கின்றது. கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்றால் எந்தத் தகுதியின் அடிப்படையில், எந்த கன்டிஷனில் ஆரம்பிக்கப்படுகின்றது? இந்த ஆண்டு எவ்வள்வு கட்டப்பட இருக்கின்றது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த ஆண்டைப் பொறுத்த வரையில் பட்ஜெட் வந்ததற்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

[1983 பிப்ரவரி 5

ஆகவே நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அல்மா மேட்டா அதாவது அனைவருக்கும் நல்வாழ்வு என்ற உலக சுகாதார நிலையத்தினுடைய அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நாடாக இருப்பதால் நம்முடைய நோக்கத் தின்படி நம்முடைய டார்கெட் 50 ஆயிரம் பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தேவை. அந்த அடிப்படையிலே படிப்படியாக ஃபேஸ்ட் ப்ரோகிராம் என்ற வகையிலே இதை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். அப்படி ஏற்படுத்து கின்றபோது பல பஞ்சாயத்து யூனியன்களுக்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக்கூடிய ஒரு திட்டத்தை நோக்கி நாம் சென்று கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொது வாக ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வகையிலும் ஒருசில ஒன்றியங்களுக்கு மட்டும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்ற நிலைமையில் இருக்கின்றது. அப்படி இருக்கின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் அந்தந்த ஒன்றியங்களிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் சென்று அவ்வப் போது வரக்கூடிய நோய்களுக்கு தடுப்பு நடவடிக்கை ஏதாவது எடுத்துக் கொண்டு வருகிறார்களா ? தற்போது அவர்களுக்கு வேன் மற்றவைகள் எல்லாம் கொடுத்திருந்தாலும் கூட எந்தப் பகுதியிலே ப்ரைமரி சென்டர் இருக்கின்றதோ அந்தப் பகுதிக்கு மட்டும்தான் பயன்படுத்தப்படுகின்றது. எனவே அத்தனை பேருக்கும் பயன்படுகின்ற வகையிலே வேறு ஏதாவது யோசனை அரசினிடத்திலே உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மிக முக்கியமான திட்டம் என்னவென்றால் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு சப்-சென்டர் என்று தாய்-சேய் நலவிடுதி என்று சொல்லுவார்கள். கிளை ஆரம்ப சுகாதார நிலையம் என்று சொல்லுவார்கள். இதை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் திட்டம். இதிலே ஆல் இந்தியா கைய்டு லைன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. 10 ஆயிரம் ஜனத்தொகை ஒரு சப்-சென்டருக்கு இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அதை மாற்றி 50 ஆயிரம் ஜனத்தொகை உள்ள இடத்திற்கு ஒரு சுகாதார நிலையம் இருக்கவேண்டும் என்ற திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதேமாதிரியாக 5 ஆயிரம் ஜனத்தொகை கொண்டிருக்கக் கூடிய அந்த ஏரியாவுக்கு ஒரு சப்-சென்டர் ஏற்படுத்திவிட்டோம் என்றால் அந்த ஊர்திகள் சப்-சென்டருக்கு சென்று அங்கே பணி ஆற்றுவதற்கு சௌகரியமாக இருக்கும். அந்த அடிப் படையில் செய்து கொண்டு வருகிறோம். அதை பொறுத்த

வரையில் நம்முடைய மாநிலம் மிக நல்ல வகையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஏன் என்றால் தன்னிறைவுத் திட்டத்தில ஏராளமான சப்-சென்டர்கள் நமக்கு கிடைத்துக்கொண்டிருக்கிறது. இந்தியாவுக்காக நிர்ணயித்துள்ள இலக்கு 2 ஆயிரம், மற்ற மாநிலங்கள் எல்லாம் எடுத்துக்கொள்கிறார்களோ இல்லையோ நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இன்னும் 2 ஆண்டுக்குள் நாம் எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆயிரம் ஜனத்தொகை உள்ள இடத்திற்கு ஒரு சென்டர் என்ற முறையை மாற்றி மலைப் பகுதிகளுக்கு அந்த எண்ணிக்கையை சற்றுக் குறைத்து அதற்கு என்று ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது Hill Area Development Programme என்று, மலைப் பகுதிகளுக்கு என்று தனியாக ஒரு ப்ரோகிராம் வைத்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இருக்கிறது. நீலகிரி மாவட்டத்திலே குலக்கொம்பு என்ற இடத்தில் நாம் ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 282 மற்றும் 283 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

தமிழக நீர்மாசு தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் வாரியம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 296—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Prevention of Water Pollution Board அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அக்குழு என்ன நடவடிக்கைகள் இதுவரை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ''(அ) தமிழக நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் வாரியம்'' (Prevention of Water Pollution Board) 19–2–1982இல் அமைக்கப்பட்டு 27–2–1982 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) விவர அறிக்கை @அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@488—489ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.